16

அனுப்புநர்
K...சண்முகம், எம்.இ., எம்.பி.ஏ.,
நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்.
124, G.S.T. ரோடு, செங்கல்பட்டு-1
ddcglregion@gmail.com

பெறுநர்
~~பெறுநர்~~
திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்
க.எண்.69 -70, பெரிய மணியக்கார தெரு,
செங்கல்பட்டு

ந.க.எண்.2391/2016/செம3 நாள்.07.09.2016

அய்யா,

பொருள் : கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம். செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் நகராட்சி, வார்டு -3, பிளாக் எண்.3, நில அளவை எண்.123/1, 124/2, 125 ஆகியவற்றில் பரப்பு 1006.5 ச.மீ மனையிடத்தில் ஸ்டில்ட் + 4 தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டிடம் கட்ட தொழில் நுட்ப அனுமதி கோரியது - கூடுதல் விவரங்ள் - தொடர்பாக.

பார்வை : ஆணையாளர், செங்கல்பட்டு நகராட்சி அவர்கள் கடிதம் ந.க.எண். 86/2016/F1, நாள். 08.8.2016

************

மேற்காண் பொருள் தொடர்பாக பார்வை 1-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட விவரங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டதில் பின்வரும் கூடுதல் விவரங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.'

1. உள்ளூர் திட்டக் குழுமப் பூதி என்பதன் படிவம் எண்.-1 பூர்த்தி செய்து பெறப்படவேண்டும்.
2. அனுகு சாலைக்கான FMB, 'A' register (TSLR Copy) மற்றும் நகராட்சி ஆணையர் கடிதம் பெறப்படவேண்டும்.
3. கட்டிட உறுதி சான்றுகள் ABC படிவங்களில் பூர்த்தி செய்து பெறப்படவேண்டும்.
4. 1:2000 எனும் அளவு திட்டத்தில் மனையிடத்தினை சுற்றிலும் 500 மீ சுற்றளவு நில உபயோகங்கள் குறிப்பிட்டு சுற்று சார்பு வரைபடம் பெறப்படவேண்டும்.
5. அதிகபட்ச கட்டிட பரப்பு விகிதம் FSI - 1.5 (or) 1.8 ஆக இருத்தல் வேண்டும். ஆனால் வரைபடத்தின்படி 1828/1006.5 = 1.82 என பாதிப்பாக அமைகிறது. எனவே திருத்திய வரைபடம் பெறப்படவேண்டும்.
6. பக்க திறவிடம் வரைபடத்தின்படி 3.5மீ என உள்ளதால் பாதிப்பாக அமைகிறது. எனவே கட்டிட உயரத்தில் $1/4^{th}$ -ன்படி 3.75மீ என குறிப்பிட்டு திருத்திய வரைபடம் பெறப்படவேண்டும்.
7. Car parking Slot வரைபடத்தில் 4 எண்ணிக்கை உள்ளதால் பாதிப்பாக அமைகிறது. ஆகையால் குடியிருப்புகள் பரப்பில் 75ச.மீ முதல் 150ச.மீ வரை 1 கார் பார்க்கிங் எனும் விதம் 8 எண்ணிக்கை கார் பார்க்கிங் Slot காண்பிக்கப்பட்ட திருத்திய வரைபடம் பெறப்படவேண்டும்.
8. Transformer yard வரைபடத்தின்படி 5 x 5மீ என குறிப்பிடப்பட்டு சரியான அளவு திட்டத்தில் இல்லை என்பதால் பாதிப்பாக அமைகிறது. மேலும் Transformer yard 5 x 5மீ (அ) 10 x 4 மீ எனும் சரியான அளவு திட்டத்தில் காண்பிக்கப்பட்டு திருத்திய வரைபடம் பெறப்படவேண்டும்.

....2

9. உத்தேச மனையிடம் அமையும் இடத்திற்கான 'Master Plan Extract' ஆணையர், செங்கல்பட்டு நகராட்சி அவர்களின் சான்றுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

10. கட்டிட நீளத்தில் 45மீட்டருக்கு Expansion Joint குறிப்பிட்டு திருத்திய வரைபடம் பெறப்படவேண்டும்.

11. தரை வரைபடம் TSLR-ன் அளவுகள் படி அளவு திட்டத்தில் வரைந்து, அதில் Drive way, ~~Joinery details~~ Turning radius குறிப்பிட்டு வரைபடம் பெறப்படவேண்டும்.

12. Lift மற்றும் மாடிப்படிக்கட்டு தனித்தனியாக குறிப்பிட்டும், அளவுகள் மெட்ரிக் முறையில் குறிப்பிட்டு வரைபடம் பெறப்படவேண்டும்.

13. Head room உயரம் குறிப்பிட்டும், Block -7 பகுதியில் சாலை உள்ளதா எனும் விவரம் காண்பிக்கப்பட வேண்டும்.

14. Position of columns சரியான இடைவெளியில் காண்பிக்கப்பட்ட வரைபடம் பெறப்படவேண்டும்.

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு.

9/9/16